

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கையில் 22.01.2025 அன்று நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக, சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அவர்களின் திருவுருவச்சிலையினை திறந்து வைத்ததை முன்னிட்டு, நகரம்பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள வீரர் வாளுக்கு வேலி அவர்களின் திருவுருவச்சிலைக்கு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், தலைமையில், மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர். உடன் வழக்கறிஞர் சிவ.கலைமணி, வாரிசுதாரர்கள் கே.செல்வராஜ், கண்ணதாசன் உட்பட பலர் உள்ளனர்.

### சிவகங்கை மாவட்டம் — நகரம்பட்டியில்

# வாளுக்கு வேலி திருவுருவச் சிலைக்கு மாலை - மரியாதை!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் — மு.பெ.சாமிநாதன் அணிவித்தார்!

சிவகங்கை, ஜன. 25-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சிவகங்கையில் 22.01.2025 அன்று நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக, சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலையினை திறந்து வைத்ததை முன்னிட்டு, நகரம்பட்டியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள வீரர் வாளுக்கு வேலி அம்பலம் திருவுருவச்சிலைக்கு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.

அந்நிகழ்வுகளில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது தெரிவித்தது:-

சுதந்திரப் போராட்டத் தியாகிகளை போற்றிடும் வகையிலும், அவர்களை கௌரவிக்கும் பொருட்டும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனடிப்படையில், 200 ஆண்டுகளுக்கு முன்னதாக, நடந்துள்ள உண்மைச் சம்பவத்தை வெளிக்கொணருகின்ற வகையில், சுதந்திரப் போராட்டத்தில் தனது பங்களிப்பையும், தியாகத்தையும் முழுமாக அளித்த சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் புகழை உலகிற்கு பறைசாற்றுகின்ற வகையிலும், அதற்கு மெருகூட்டும் பொருட்டும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தன் பொன்மொழி களால் வரலாற்றுச் சிறப்புகளை நூல்களாக பொறித்துள்ளார்.

அன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் விதைத்த விதையின் பயனாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் புகழிற்கு வலுச்சேர்க்கின்ற வகையில், அன்னாரது பிறந்த நாளினை அரசு விழாவாக கொண்டாடிட உத்தரவிட்டார்கள். அதன்படி, கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களுக்கு சிறப்பு சேர்த்திடும் வகையில், அன்னாருக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நகரம்பட்டியில் திருவுருவச்சிலை அமைக்கப்பதற்கென தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 22.01.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டப்பட்டு, அப்பணிகள் இனிதே நிறைவுற்று, வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச் சிலை இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், வரலாற்று சிறப்புமிக்க சிவகங்கை மாவட்டத்திற்கே நேரில் வருகை புரிந்து, கலந்து கொண்ட அரசு நிகழ்ச்சியில் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டுள்ளது மேலும் சிறப்பிற்குரியதாகும்.

இதற்கான பெரும் முயற்சியில், நான் ஈடுபட்டதற்கான முழுப்பயனையும் அடைந்தமைக்கு, மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இதற்கான சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், செய்தித்துறை அமைச்சர் அவர்களுக்கும், சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் செய்தித்துறை அமைச்சர் அவர்களும் காலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச் சிலை அமையப்பெற்றுள்ள நகரம்பட்டியில் நேரில் கலந்து கொண்டு, சிறப்பித்துள்ளார்கள்.

அதனைத்தொடர்ந்து, நானும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் தற்போது, வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, அரசின் சார்பில் மரியாதை செலுத்தியுள்ளோம்.

மொழி, இனம், சுதந்திரம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, அதற்கென பாடுபட்டவர்களை கௌரவிக்கின்ற வகையிலும், அவர்களின் புகழை போற்றுகின்ற வகையிலும், அவர்களுக்கு நினைவ கங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் திருவுருவச்சிலை கள் ஆகியவைகளை அமைத்து, எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்கின்ற வகையில், சிறப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு. தலைசிறந்த முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழந்து வருகிறார்கள் என கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வழக்கறிஞர் சிவ.கலைமணி அம்பலம், வாரிசுதாரர்கள் கே.செல்வராஜ், கண்ணதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் — மாணவரணி சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகளுக்கு - வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் பெ.கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, ஜன. 25-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக கழக மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25.01.2025 - சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் தூத்துக்குடி புறநகர் பேருந்து நிறுத்தம் எதிரில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சி. சீனிவாசன் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்திற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பெ.கீதா ஜீவன் சிறப்புரை ஆற்றுகிறார். விளாத்திகுளம் சட்ட மன்ற உறுப்பினர் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன்,தூத்துக்குடி தூத்துக்குடி மாநகராட்சி மேயர் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெகன் பெரியசாமி, மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ஆனந்த சேகரன், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் வசந்தம் ஏ.சி. ஜெயக்குமார்,மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் துறைமுகம் புளோரன்ஸ், தலைமை செயற்குழு உறுப்பினர் என்.ராதாகிருஷ்ணன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பி. அன்பழகன் மாநகராட்சி துணை மேயர் எஸ். ஜெனிட்டா செல்வராஜ் அவர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மாவட்ட மாணவரணி துணை அமைப்பா ளர்கள் பிரதீபா, ஆகாஷ் (எ) பிரகாஷ் பாபு, கனகராஜ், யோக லட்சுமி மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் கார்த்திகேயன்,கந்தசாமி, பாலமுருகன், அர்ஜுன், சத்தியா ஈஸ்வரி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி, திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 32, இந்திராநகர், வேலன்நகர் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று புதிய பகுதி நேர நியாய விலை கடையினை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் திருப்பத்தூர் ஒன்றிய கழக செயலாளருமான ஏ.நல்லதம்பி பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் சங்கீதாவெங்கடேஷ், வழக்கறிஞர் சு.இராஜேந்திரன், சு.அரசு, கே.முருகேசன், கே.எஸ்.ஏ.மோகன்ராஜ், செல்விதிருமுகன், கோபிநாத், பி.வி.பிரேம்குமார், லட்சுமி வாசு, தசரதன், நாகேந்திரன் கலந்து கொண்டார்கள்.

### கோடை காலத்தில் தடையில்லா சீரான மின் விநியோகம்

# தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் நடவடிக்கைகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன. 25-

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி தலைமையில் எதிர்வரும் கோடை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் தடையில்லா சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி அவர்கள் நேற்று (24.01.2025) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமையகத்தில், எதிர்வரும் கோடை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, வடகிழக்கு பருவமழை மற்றும் பெஞ்சல் புயல் காரணமாக, பாதிப்படைந்த சுமார் 12,265 மின் கம்பங்கள், 343 பில்லர் பெட்டிகள், 680.86 கி,மீ மின் கம்பிகள், 485 மின் மாற்றிகள் மற்றும் 16 துணைமின்நிலையங்களை போர்க்கால அடிப்படையில் மின் விநியோக சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு குறுகிய காலத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் சீரான மின்சாரம் வழங்கியதற்காக அனைத்து அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு மின்சாரத்துறை அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, எதிர்வரும் கோடைகாலத்தில் தமிழ்நாடு முழுவதும் தடையில்லா சீரான மின்சாரம் வழங்குவதற்கு மின்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காக இதுவரை 48 துணை மின் நிலையங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன, 20 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவதற்கான பணிகள் நடைப்பெற்று வருகின்றன. மேலும், தமிழ்நாடு முழுவதும், இயக்கத்தில் உள்ள 260 திறன் மின் மாற்றிகளின் (Power Transformer) தரம் உயர்த்தப்பட்டுள்ளன, 22 திறன் மின் மாற்றிகளின் தரம் உயர்த்தும் பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

மேலும், அதிகரித்து வரும் மின் தேவையினை கருத்தில் கொண்டு கூடுதலாக அமைக்க வேண்டிய புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் திறன் மின் மாற்றிகள் குறித்தும், குறிப்பாக, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளின் மின் தேவையினை கருத்தில் கொண்டு நிறுவப்பட உள்ள துணை மின் நிலையங்கள் குறித்தும் அறிவுரை வழங்கினார்.

மின் பகிர்மான வட்டம் வாரியாக விரிவான ஆய்வினை மேற்கொண்ட மின்சாரத் துறை அமைச்சர் வட்ட அளவில் அதிக அளவு மின் தடைகள், மின் மாற்றிகள் பழுது மற்றும் மின்னகத்தில் பெறப்பட்ட புகார்கள் கொண்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் தமது பணிகளில் தனிக் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார்.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் இருக்கக்கூடிய துணை மின் நிலையங்கள், மின்மாற்றிகள் மற்றும் பில்லர் பெட்டிகள் ஆகியவற்றில் உரிய முறையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தனிக்கவனம் செலுத்தி, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் மின்நுகர்வோரிடமிருந்து வரும் புகார்களை குறைப்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சாரத்துறை அமைச்சர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டு மக்களுக்கு தடையில்லா, சீரான மின்சாரம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அலுவலர்களுக்கு மின்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், இணை மேலாண்மை இயக்குநர்(நிதி) விஷ்ணு மஹாஜன், மின் தொடரமைப்பு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி கே.இந்திராணி, இயக்குநர் (பகிர்மானம்) அ.ரா.மாஸ்கர்னஸ், மின் பகிர்மானக் கழக இயக்குநர் திருமதி கே.மலர்விழி மற்றும் உயர் அலுவலர்கள், உள்ளிட்ட அனைத்து இயக்குநர்கள், மண்டல தலைமைப் பொறியாளர்கள், மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

மின் சேவைகள் மற்றும் மின் தடை குறித்த புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் மின்னகத்தை 94987 94987 தொடர்பு கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# இன்று (25ஆம் தேதி) திருப்பத்தூரில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## திருச்சி சிவா எம்.பி. — கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை!

சிவகங்கை. ஜன. 25-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் இன்று 25ஆம் தேதி நடைபெறும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமைக் கழக பேச்சாளர் கே.வி.ராமகிருஷ்ணன் மாநில மாணவரணி இனை அமைப்பாளர் திருமதி பூரன சங்கீதா ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள். இன்று (25ம்தேதி) சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அண்ணா திடலில் பழைய பஸ் நிலையம் அருகில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இன்று மாலை 6 மணிக்கு கூட்டம் நடைபெறுகிறது. மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி .ராஜ்குமார் தலைமை வகிக்கிறார். பேரூர் கழக செயலாளர் ஆர். கார்த்திகேயன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர்கள் ராஜ அமுதன், முகமது கனி , பாண்டியராஜன், சந்திரசேகரன், ரம்யா, ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் எஸ். சண்முக வடிவேல் வரவேற்று பேசுகிறார். வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தலைமைக் கழக பேச்சாளர் ராமகிருஷ்ணன் மாநில மாணவரணி இணை செயலாளர் திருமதி பூரண சங்கீதா திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள். கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவரணி நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். பேரூர் கழக மாணவரணி அமைப்பாளர் அபுதாகீர் நன்றி கூறுகிறார் . கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் தலைமையில் மாணவரணி நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

### மதுரை வடக்கு மாவட்டம்

# மேலூரில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை!

மதுரை, ஜன. 24-

மதுரை வடக்கு மாவட்ட மாணவரணி தி.மு.க. சார்பில் இன்று (25ஆம் தேதி) மேலூரில் மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இதில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் மணி வரை மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்ற உள்ளார். அதன் விபரம்

மதுரை வடக்கு மாவட்ட மாணவரணி சார்பாக மேலூரில் இன்று (25.01.2025 - சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில் செக்கடி கலைஞர் திடலில் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்திற்கு மேலூர் நகர செயலாளர் முகமது யாசின் தலைமை வகிக்கிறார். ஒன்றிய செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, குமரன், ராஜராஜன், பழனி, பாலகிருஷ்ணன், ராஜேந்திர பிரபு, வள்ளாளப்பட்டி கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றார்கள்.

மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஆதிசங்கர், துணை அமைப்பாளர்கள் கதிரவன், முரளிதரன், கேசவன், சரவணன், அபிதா பாண்டியன் ஆகியோர் வரவேற்று பேசுகிறார்கள்.

மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றுகின்றார்.

மேலும் தலைமைக் கழக பேச்சாளர்கள் முனைவர் பொன்னேரி சிவா, வயலூர் கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றுகின்றார்கள். மற்றும் மாவட்ட, மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இந் நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

மேலும் நிர்வாகிகள் விஜய மழுவேந்தி, சிட்டிபாபு, தமிழ்வாணன், கார்த்திக் நன்றி கூற உள்ளனர்.

### வேலூரில் மாவட்ட மாணவரணி சார்பில்

# வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

வேலூர், ஜன . 24 -

வேலூர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் வருகிற சனிக்கிழமை அண்ணா கலையரங்கம் அருகில் நடக்கிறது.

கூட்டத்திற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ்தலைமை தாங்குகிறார்.

துணை அமைப்பாளர் அரவிந்த் அசோகன், மாநகர அமைப்பாளர் ஆர்.அருண் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்கள். நிகழ்ச்சியில் எழும்பூர் சட்ட மன்ற உறுப்பினரும், கழக சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்,எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன்,

தலைமை கழக பேச்சாளர் ஆவடி கா.மு.ஜான், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார்,துணை மேயர் சுனில்குமார், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

முடிவில் மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர். பிரபாகரன் நன்றி கூறுகிறார்.



திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் தொகுதிக்கு உட்பட்ட மின்னூர்,செங்கிலிகுப்பம் ஆகிய 2ஊராட்சிகளுக்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் மக்கள் தொடர்பு முகாம் மின்னூர் எம்.கே.மஹாலில் நடந்தது. நிகழ்ச்சியில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களும், கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவு பெட்டகமும் மாற்றுத் திறனாளிகளுக்கு இரு சக்கர வாகனமும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ், மாதனூர் ஒன்றிய குழு தலைவர் ப.ச. சுரேஷ்குமார் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.